**செய்தி வெளியீடு எண்: 630** **நாள் : 18/10/2012**

**<u>மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில்</u>**
**<u>வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து</u>**
**<u>அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்</u>**

வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. 'தோப்பு' என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் எழிலகம் வருவாய் கருத்தரங்க கூடத்தில் இன்று (18.10.2012) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை, நிலநிருவாகம், நிலசீர்திருத்தம், ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

'தலைமையுரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 'அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது, மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய்த்துறை முக்கியப் பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்கி வருகிறது.' மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் வருவாய்த்துறை பற்றி பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்படி பல்வேறு பெருமைகளையும், பாரம்பரியமும் மிக்க வருவாய்த் துறையின் அமைச்சராக பணியாற்றிட அனுமதி அளித்துள்ளமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், வருவாய்த் துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களான, புதிய வருவாய் வட்டங்கள், ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகங்கள், வருவாய் கோட்டம் மற்றும் வருவாய் வட்ட அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள், பணிகளை விரைவாக செய்திட, நாட்டிலேயே முதன் முறையாக, கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள், அலுவலகங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான புதிய பணியிடங்கள், கணினிகள், புதிய வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உருவாக்கித் தந்த வண்ணம் உள்ளார்கள். கடந்த 12 ஆம் தேதியன்று வருவாய்த் துறைக்கான விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 1,705.95 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட பணிகளான, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம், நிருவாகத் திறனை மேம்படுத்திட, மக்கள் தொகை அடிப்படையிலான திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கம் வட்டம், நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை வட்டம், விழுப்புரம் மாவட்டம் சின்ன சேலம் வட்டம், சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் வட்டம் ஆகிய 4 புதிய வருவாய் வட்டங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 107 புதிய வருவாய் கிராமங்கள், அகத்தீஸ்வரம் வட்டத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம், ஆகியவற்றை தொடங்கி வைத்து, காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டத்தில் 7 கிராமங்களில் நில அளவைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 221 ஏக்கர் பரப்பளவு கொண்ட 5229 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் 30 மாவட்டங்களைச் சார்ந்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 124 புதிய வாகனங்களையும் வழங்கியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வருவாய்த்துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மேலும், நமது துறையின் சார்பில் வைக்கப்படும் கோரிக்கைகளை உடனடியாக பரிசீலனை செய்து முடிவுகளை விரைந்து அறிவிப்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிகரில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''தமிழக அரசின் பல்வேறு துறைகளில் வருவாய்த்துறையானது முன்னோடியும் முதன்மையான துறையுமாகும். ஏழை எளிய மக்களின் நலன்களை போற்றிப் பேணிடும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது பெருமைக்குரியது. குறிப்பாக, மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு மாநிலம் முழுதும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள **புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின்கீழ்**, நாளது வரையில் **22,42,112** மனுக்களின் மீதான இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தமிழக வருவாய்த்துறை வரலாற்றில் இதுவரையில் நிகழ்த்தப்படாத சாதனை என்றால் அது மிகையில்லை. மேலும் **1,98,556** பயனாளிகளுக்கு **இலவச வீட்டுமனைப் பட்டாக்களும்** வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிகளில் பயிலும் 6, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான **அனைத்து சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளியிலே பெற்றிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்** கீழ், நாளதுவரையில் பள்ளிகளிலிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் **3.98 இலட்சம் மாணவர்களுக்கு சான்றிதழ்கள்** வழங்கப்பட்டு உள்ளன.

சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் தற்பொழுது **28.40 இலட்சம்** பயனாளிகளுக்கு மாதம் ரூ.1,000/—ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஒய்வூதியப் பலன்கள் விரைவாக சென்றடைந்திட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'பயோ மெட்ரிக் கார்டு' மூலம் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிரமங்களில் வசிக்கும் ஒய்வூதியதாரர்களுக்கு **'பயோ மெட்ரிக் கார்டு'** திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலம் துரிதமாக ஒய்வூதியமானது வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதுமுள்ள ஏழை எளிய விவசாயப் பெருமக்களுக்கு பெரிதும் பயன் தரும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள **'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்'** கீழ் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, ஏறத்தாழ 3 கோடி பயனாளிகள் தகுதி வாய்ந்த உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் **72.40 இலட்சம்** குடும்பதாரர் களுக்கு அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ், நாளது வரையில் உறுப்பினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு கல்வி உதவி, உறுப்பினர் மற்றும் அவரது பிள்ளைகளுக்கான திருமண உதவி, இயற்கையான மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு, விபத்து காயம், மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு, முதியோர் ஒய்வூதியம் மற்றும் ஆதரவற்ற வேளாண் தொழிலாளர் ஒய்வூதியம் போன்ற வகைகளில், நாளதுவரையில் ஏறத்தாழ **7,96,157 பயனாளிகளுக்கு 910 கோடியே 82 இலட்சம் ரூபாய்** நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளதும் மகத்தான சாதனை என்று குறிப்பிட்டார்கள். அனைத்துத் தரப்பினரும் பயன் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வினை கிராமப்புறங்களில் ஏற்படுத்திட உரிய நடவடிக்கைகளை மாவட்ட வருவாய் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வரவிருக்கும் பருவமழைக் காலங்களில், போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதோடு, நமது வருவாய்த்துறையின் சார்பிலான உடனடி நிவாரண உதவிகளை விரைந்து வழங்கிட வேண்டும். திட்டங்களை செயல்படுத்திடும் போது அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து அர்ப்பணிப்பு உணர்வோடு நாம் பணியாற்றிட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் (பொ) திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன் இ.ஆ.ப., நில சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ. சந்திரகுமார் இ.ஆ.ப., மற்றும் வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஒப்பம்)
யத்தீந்திர நாத் ஸ்வேன் இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர்
மற்றும் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் (பொ)

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9